செ.வெ.எண்: 02 **நாள்: 01.02.2017**

பத்திரிக்கைச் செய்தி

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செய்திக்குறிப்பு
கல்வி மாவட்ட அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகள்-2016-17

சர்வதேச அளவில் பதக்கம் பெறும் திறனாய்வாளர்களை கண்டறியும் திட்டத்தின்கீழ், பள்ளிகளில் நடத்தப்பட்ட உடற்திறன் தேர்வுகளில் தேர்வு செய்யப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு கல்வி மாவட்ட அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் கீழ்கண்டுள்ளபடி நடத்தப்படவுள்ளது.

அறந்தாங்கி கல்வி மாவட்ட அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் 08.02.2017 அன்று ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி விளையாட்டுத் திடலில் நடத்தப்படவுள்ளது. புதுக்கோட்டை கல்வி மாவட்ட அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் 10.02.2017 அன்று மாவட்ட விளையாட்டரங்கம், புதுக்கோட்டையில் நடத்தப்படவுள்ளது.

நடத்தப்படும் விளையாட்டு நிகழ்வுகள்:

100மீ ஓட்டம், 200மீ ஓட்டம், 400மீ ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் குண்டு எறிதல்

போட்டியில் கலந்துக் கொள்ள தகுதிகள்

1) 2016-17-ஆம் ஆண்டில் 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்பட்ட உடற்திறன் தேர்வில் 10க்கு 10 அல்லது ஏதாவது இரண்டு நிகழ்வுகளில் 9 மற்றும் 8 மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகள் மட்டும் கலந்து கொள்ளலாம்.
2) தடகள விளையாட்டுப் போட்டிகள் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு வகுப்பு வாரியாக நடத்தப்படும்.
3) ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவி இரண்டு நிகழ்வுகளில் (events) கலந்துக் கொள்ளலாம்.
4) உடற்திறன் தேர்வு நடத்தி இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒருங்கிணைந்த அறிக்கையினை தவறாது கொண்டு வருதல் வேண்டும். கொண்டு வராதவர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்

கல்வி மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள பயணப்படி மற்றும் தினப்படிகள் வழங்கப்பட மாட்டாது. முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு பரிசு பொருட்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். முதல் இரண்டு இடங்களை பெறும் மாணவ,மாணவிகள் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள அரசு செலவில் அழைத்துச் செல்லப்படுவார்கள். போட்டி நடைபெறும் நாள் அன்று போட்டி நடைபெறும் இடத்திற்கு காலை 8.00 மணிக்கு மாணவ,மாணவிகள் வருதல் வேண்டும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.